28.03.2022
C.C.46 /2021
PW 1 கோபால்

குறுக்குவிசாரணை -

நீங்கள் விவசாயம் செய்து வருகிறீர்கள் என்றால் சரிதான். முன்பு போக்குவரத்து துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றுவிட்டேன். தற்போது என் மாத வருமானம் 25,000 ஆகும். நான் இதற்கு முன்பு சுமார் 45 வருடங்களாக பாதிரிகோடு ஊரில் தலைவராக இருந்தேன். இவ்வழக்கின் எதிரியும் பாதிரிகோடு ஊரில் தலைவராக இருந்தார். நான் தலைவராக இருந்தபோதும் காவடிகட்டு சீட்டு என ஆரம்பிக்கப்பட்டது. இவ்வழக்கின் எதிரியும் காவடிகட்டு சீட்டில் சேர்ந்திருந்தார். மேற்படி எதிரிக்கு நான் 20.06.2021 தேதி என் வீட்டில வைத்து ரூ 6 இலட்சம் பணம் கொடுத்தேன். நான் என் வீட்டில் வைத்து பணம் கொடுக்கும்போது என் வீட்டில் மனைவி இருந்தார். ஆனால் நான் பணம் கொடுத்ததை என் மனைவி பார்க்கவில்லை. என்ன தேவைக்காக பணம் உங்களிடம் எதரி பணம் கேட்டார் என்றால் குடும்ப தேவைக்காக என்று கேட்டார். எதிரியின் மூத்த மகன் 12 வகுப்பு படித்து வரும் விவரம் உங்களுக்கு தெரியுமா என்றால் 2 மகன் உள்ளது தெரியும் என்ன படிக்கிறார்கள் என்று தெரியாது. நீங்கள் பணம் எந்த டினாமினேஷனில் கொடுத்தீர்கள் என்றால் 500 ரூபாய் நோட்டுகள் மற்றும் சில்லரையாகவும் கொடுத்தேன், டினாமிஷேன் தெரியாது. எவ்வளவு வட்டிக்கு கொடுத்தீர்கள் என்றால் நான் கேட்கவில்லை, ஆனால் அவர் வட்டியுடன் தருவதாக தெரவித்தார். எவ்வாறு ரூ 6 இலட்சம் பணம் வந்தது என்றால் நான் எதிரி பலதடவை கேட்டபோது நான் இல்லை என்று தெரிவித்தேன், அவர் வற்புறுத்தியதால் நான் என் வீட்டில் இருந்த நகையை இந்தியன் வங்கியில் ரூ 4,20,000க்கு அடகு வைத்து பெற்ற பணம் மற்றும் மீதி பணம் என் நண்பரிடம் வாங்கி கொடுத்தேன். மேற்படி நகை அடகு எந்த தேதியில் வைத்தீர்கள் என்றால் தேதி தற்போது நியாபகமில்லை, அடகு வைத்த ரசீதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். மேற்படி ரூ 1,80,000 பணத்தை யாரிடம் வாங்கினீர்கள் என்றால் முருகன், நெய்யூர் காட்டுவிளையில் உள்ளவரிடம் வாங்கினேன். மேற்படி நீங்கள்

பெற்ற பணத்தை வட்டிக்காக வாங்கினீர்களா அல்லது பிராமிசரி நோட் எழுதி வாங்கினீர்களா என்றால் அவர் எனக்கு தெரிந்த நபர், அதனால் கொடுக்கவில்லை. நீங்கள் வாங்கிய ரூ 1,80,000 பணத்தை கொஞ்சம் கொஞ்சமாக திருப்பி கொடுத்துவிட்டேன். மேற்படி நகை அடகு வைத்ததாக சொல்லியுள்ளீர்கள் அதை திருப்பி விட்டீர்களா என்றால் 3 ஆக பிரித்து வைத்தேன், 1 நகையை திருப்பிவிட்டேன், 2 நகைகள் அடகில் தான் உள்ளது. 25.08.2021 தேதி வசூலுக்காக தாக்கல் செய்தேன். எந்த தேதியில் திருப்பப்பட்டது என்றால் 27.08.2021 ஆகும். வழக்கறிவிப்பு எந்த தேதியில் அனுப்பினீர்கள் என்றால் 30.08.2021 தேதியில் அனுப்பினேன். மேற்படி காசோலை பணமில்லாமல் திருப்பப்பட்டது குறித்து எதிரியிடம் கேட்டீராகளா என்றால் நான் பணம் கேட்டபோதே 24.08.2021 தேதி காசோலை செலுத்தலாம் என்றும், பணம் ரெடியாக இருக்கும் என்றும், காசோலை செலுத்துவதற்கு முன்பாக என்னிடம் நியாபகப்படுத்த சொன்னார், நான் நியாபகப்படுத்தினேன், அவர் பணம் செலுத்தியதாக தெரிவித்தார். அதனால் நான் காசோலையை தாக்கல் செய்தேன். மேற்படி புதசாஆ1 காசோலையில் உளள் விவரத்தை வங்கியல் எழுதிக்கொண்டார்கள் என்றால் சரியல்ல, எதிரி என் வீட்டிற்கு வரும் முன்னரே எழுதி கொண்டுவந்தார், என் முன்னிலையில் கையெழுத்து மட்டும் போடடு கொடுத்தார். மேற்படி புதசாஆ1 காசோலையில் கையொபபம் மற்றும் கையெழுத்திற்கு வித்தியாசம் உள்ளது என்றால் சரிதான், எதிரி என் வீட்டிற்கு வரும் முன்னரே எழுதி கொண்டுவந்தார், என் முன்னிலையில் கையெழுத்து மட்டும் போட்டு கொடுத்தார். எதிரி நீங்கள் ஊர் தலைவைராக இருந்தபோது காவடி சீட்டில் சீட்டுபிடித்தபோது கொடுத்தது தான் புதசாஆ1 காசோலை என்றால் சரியல்ல. உங்களுக்கும் எதிரிக்கும் ஊர் தலைவர் ஆவதில் கருத்து வேறுபாடு இருந்தது என்றால் சரியல்ல. எதிரிக்கு மாதம் ரூ 35,000 வருமானம் வருகிறது என்றும ஆகவே உங்களிடம் கடனாக பணம் வாங்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல, என்னிடம் வீட்டு தேவைக்காக பணம் கேட்டார். நீங்கள் வீடுபோடுவதற்காக பணம் உங்களிடம் கேட்டதாக

சொல்லியுள்ளீர்கள் 2018 ஆம் வருடம் 5 இலட்சம் வங்கியில் கடன்போட்டு வீடு கட்டியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, என்னிடம் குடும்ப தேவைக்காக என்று பணம் கேட்டார். மேற்படி நீங்கள் பணம் கொடுத்த விவரம் என் மனைவிக்கு நேரடியாக தெரியாது, மேலும் எதிரியின் மனைவிக்கு தெரியுமா என்று எனக்கு தெரியாது. எங்கள் ஊரில் சீட்டு நடத்தி வருவது உண்மை தான், அவர் சீட்டுபோட்டதும் உண்மை தான். ஆனால் எந்த காசோலையும் சீட்டிற்காக அவரிடம் வாங்கவில்லை, நான் தலைவராக இருந்தேன், பணம் வாங்குவது பெறுவது எல்லாம் பொருளாளர் தான் பார்ப்பார், எனக்கும் பணம் வாங்குவதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. மேற்படி சீட்டு போட்டதற்காக சூரிட்டிக்காக கொடுத்த காசோலை என்றால் சரியல்ல. நீங்கள் வழக்கு காசோலை சம்பந்தமாக வங்கியில் தாக்கல் செய்தபிறகு பெரியவர்கள் உங்களிடம் வந்து பேசினார்கள் என்றால் சரியல்ல. நீங்கள் அனுப்பிய வழக்கறிவிப்பிற்கு பதிலறிவிப்பு அனுப்பினார் என்றால் பொய்யான விவரங்களுடன் பதிலறிவிப்பு அனுப்பினார்.